செ.வெ.எண்: 440 நாள்: 15.07.2020

**கொரோனா நோய் தொடர்பாக வாட்ஸ்அப்-ல் வதந்தி பரப்பும் நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்படும்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தகவல்**

தஞ்சாவூர் மாவட்டம், கொரோனா நோய் தொடர்பாக வாட்ஸ்அப்-ல் வதந்தி பரப்பும் நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது :-

தஞ்சாவூர் மாநகரில் உள்ள சில தனியார் மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கொரோனா நோய்த்தொற்று ஏற்பட்ட காரணத்தினால், தொடர்புடைய மருத்துவமனைகள் மூடப்பட்டதாக தஞ்சாவூர் வட்டம், புதுப்பட்டினம் கிராம நிர்வாக அலுவலருக்கு வாட்ஸ்-அப் மெசேஜ் வந்துள்ளது. அதனடிப்படையில், புதுப்பட்டினம் கிராம நிர்வாக அலுவலர் வாட்ஸ்-அப் மெசேஜில் குறிப்பிடப்பட்டிருந்த தனியார் மருத்துவமனைகளுக்கு நேரில் சென்று பார்த்தபோது, சம்பந்தப்பட்ட மருத்துவமனைகள் வழக்கம்போல் இயங்கிக்கொண்டிருந்தது தெரியவந்தது.

எனவே, தவறான செய்தியை சமூக வலைதளங்களில் பதிவிட்ட மர்ம நபரை கண்டுபிடித்து, அவர்மீது நடவடிக்கை எடுத்திட புதுப்பட்டினம் கிராம நிர்வாக அலுவலர் அவர்களால் தஞ்சாவூர் நகர தெற்கு காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. புகாரின் அடிப்படையில், கொரோனா நோய் தொடர்பாக சமூக வலைதளங்களில் தவறான செய்திகளை பரப்பிய மர்ம நபர் மீது தகவல் தொழில்நுட்ப சட்டம் 153, 505(1)(b), 67 ஆகிய பிரிவுகளின் கீழும், பேரிடர் மேலாண்மை சட்டம் 54 பிரிவின் கீழும் வழக்கு பதிவு செய்யப்பட்டு, வதந்தி பரப்பிய மர்ம நபரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

எனவே, கொரோனா நோய்த்தொற்று தொடர்பாக உரிய ஆதாரங்கள் இல்லாத செய்திகள் மற்றும் உறுதிபடுத்தப்படாத செய்திகளை சமூக வலைதளங்களில் பதிவிடுவோர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.